

# Little Otter, Litter Trouble

# லிட்டில் ஓட்டர் லிட்டர் டிரபல்

Illustrated by Cheng Puay Koon

## The Story of Toby

This book is inspired by the true story of a smooth-coated otter pup that was left behind by his family.

He was subsequently rescued by a member of the public and taken to Singapore Zoo.

The vets nursed him back to health and named him 'Toby'. Once Toby was strong enough, the Zoo staff took him back to the beach where he was reunited with his family.





“லிட்டில் ஓட்டர் லிட்டர் டிரபல்” என்பது தனது குடும்பத்தால் கைவிடப்பட்ட, பளபளப்பான தோற்றத்தைக் கொண்ட ஒரு நீர்நாய்க் குட்டியின் உண்மைக் கதையால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட கதையாகும். பளபளப்பான தோற்றத்தைக் கொண்ட நீர்நாய்கள், சிங்கப்பூரின் நீர்வழிகளைச் சுற்றி காணப்படும் ஒரு பூர்வீக இனமாகும்.

இடம்பெயர்ந்த நீர்நாய்க்குட்டியை பொதுமக்களில் ஒருவர் மீட்டு சிங்கப்பூர் விலங்குத் தோட்டத்திற்குக் கொண்டு சென்றார்.

கால்நடை மருத்துவர்கள் அதனைக் காப்பாற்றி, ‘டோபி’ என்று பெயரிட்டனர். டோபி போதுமான வலிமையைப் பெற்றதும், விலங்கியல் தோட்டத்தின் ஊழியர்கள் அதை மீண்டும் கடற்கரைக்கு எடுத்துச் சென்று அங்கு விடுவித்தனர், டோபி தனது குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்தது.

# Little Otter, Litter Trouble

# லிட்டில் ஓட்டர் லிட்டர் டிரபல்

Illustrated by **Cheng Puay Koon**






































Save our Otters
Save our Otters
Save our Otters

## About Otters

Smooth-coated otters live in mangrove forests and coastal areas. They are also commonly seen in some of our parks, particularly near waterways.

The oriental small-clawed otter is another otter species that can be sighted around Singapore's offshore island, Pulau Ubin. This otter is the smallest of the 13 species of otters.

Otters were thought to be extinct in Singapore until they were sighted again in the 1990s.

### Did You Know?

- Otters live in closely-knit family groups. They use scent to mark their homes and 'talk' to one another. They also make different calls to keep in touch!
- Otters have very sensitive paws and long whiskers to help them sense their surroundings and to hunt for fish, crayfish, crabs, mussels, frogs and even small birds.
- When threatened, adult otters may abandon their pups in their holt. Always keep a respectful distance from otter families.
- 80% of litter on land finds its way to rivers and oceans, polluting the environment and threatening aquatic and marine animals such as otters. We can help by not littering.

## நீர்நாய்களைப் பற்றி

பளபளப்பான தோற்றத்தைக் கொண்ட நீர்நாய்கள் சதுப்புநிலக் காடுகளிலும், கடலோரப் பகுதிகளிலும் வாழ்கின்றன. அவை பொதுவாக நமது பூங்காக்கள் சிலவற்றிலும், குறிப்பாக நீர்வழிகளுக்கு அருகிலும் காணப்படுகின்றன.

சிறிய நகத்தைக் கொண்ட கிழக்கத்திய நீர்நாய் என்பது சிங்கப்பூரின் கடல் தீவான புலாவ் உபினைச் சுற்றி காணப்படக்கூடிய மற்றொரு நீர்நாய் இனமாகும். இந்த நீர்நாய் தான் 13 வகையான நீர்நாய்களில் மிகச் சிறியது.

நீர்நாய்கள் 1990'களில் மீண்டும் காணப்படும் வரை அவை சிங்கப்பூரில் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டது.

### உங்களுக்குத் தெரியுமா?

- நீர்நாய்கள் நெருக்கமாகப் பிணைந்த குடும்பக் குழுக்களில் வாழ்கின்றன. அவை தங்கள் வாழ்விடங்களைக் குறிப்பதற்கும், ஒன்றுடன் ஒன்று 'பேசிக் கொள்வதற்கும்' வாசனைத் திரவியத்தை பயன்படுத்துகின்றன. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பில் இருப்பதற்கு வெவ்வேறு அழைப்புகளையும் செய்கின்றன!
- நீர்நாய்கள் தங்களைச் சுற்றியுள்ளவற்றை உணர்வதற்கும், மீன், நன்னீர் நண்டு, நண்டுகள், சிப்பிகள், தவளைகள் மற்றும் சிறிய பறவைகளை வேட்டையாடுவதற்கும் உதவ மிகவும் உணர்திறன் வாய்ந்த பாதங்களையும், உணர் மயிரிழைகளையும் கொண்டுள்ளன.
- அச்சுறுத்தப்படும் போது, நீர்நாய்கள் தங்கள் குட்டிகளை அவற்றின் குகையிலேயே விட்டுவிட்டுச் சென்றுவிடக்கூடும். நீர்நாய்க் குடும்பங்களுக்கு மதிப்பளித்து, அவற்றிடமிருந்து எப்போதும் போதுமான தூரத்தைப் பராமரியுங்கள்.
- நிலத்தில் உள்ள 80% குப்பைகள் ஆறுகள் மற்றும் சமுத்திரங்களைச் சென்றடைவதற்கான வழிகளைக் கண்டறிந்து, சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன, மேலும் நீர்நாய்கள் போன்ற நீர்வாழ் மற்றும் கடல்வாழ் விலங்குகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. நாம் குப்பை போடாமல் இருப்பதன் மூலம் உதவலாம்.

Copyright ©2018 Singapore Zoological Gardens
Published in August 2018

Singapore Zoological Gardens
80 Mandai Lake Road
Singapore 729826
Website: http://www.wrs.com.sg
Email: enquiry@wrs.com.sg

Written by Emily Lim
Translated by Lim Siew Gek,
Teng Mui Kim and Teo Phoei Peng
Illustrated by Cheng Puay Koon

All rights reserved.
No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying or otherwise, without prior permission of the copyright holder.

ISBN: 978-981-11-6229-9



Supported by:

bilingualism.sg

LEE KUAN YEW FUND FOR BILINGUALISM

Wildlife Reserves Singapore Group

JURONG BIRD PARK

NIGHT SAFARI

River Safari

Singapore Zoo

# 3-2-1

# நீர்நாயின் வேடிக்கையான விளையாட்டு

பாலர் பள்ளி மாணவர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது



இந்த வளஆதாரம் பின்வரும் பகுதிகளில் கற்றல் விளைவுகளை ஆதரிப்பதற்காக ஆரம்பகால கற்றோரைப் பேணி வளர்த்தல் (Nurturing Early Learners, NEL) கட்டமைப்போடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது:



- மொழி மற்றும் கல்வியறிவு
- உலகை ஆராய்ந்து கண்டுபிடித்தல்
- சமூக மற்றும் மனவுணர்வு சார்ந்த மேம்பாடு



3-2-1
நீர்நாயின் வேடிக்கையான விளையாட்டு

# 3 மொழி மற்றும் கல்வியறிவுத் திறன்களைப் பயிற்சி செய்ய ‘லிட்டில் ஓட்டர், லிட்டர் டிரபல்’ என்ற சொற்களற்ற புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான 3 வழிகள்

## வார்த்தை சவால்

படத்தில் காணக்கூடிய பொருட்கள் அல்லது செயல்களுக்காக 20 சொற்களைக் கூறுமாறு குழந்தைகளை அழைக்க படப்புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியையும் பயன்படுத்துங்கள்.



பரிந்துரைக்கப்பட்ட நினைவூட்டிகள்:

- நீங்கள் என்ன வண்ணங்கள்/வடிவங்களைக் காண்கிறீர்கள்?
- நீங்கள் என்ன பொருட்களைக் காண்கிறீர்கள்?
- அப்பா/சிறுமி/சிறுவன்/நீர்நாய் செய்வதென்ன?

## சிந்தியுங்கள்-உணருங்கள்-அக்கறை செலுத்துங்கள் சிந்தனை வழக்கம்

8 மற்றும் 9ஆம் பக்கங்களுக்குப் புரட்டுங்கள். கதாபாத்திரங்களை வாய்மொழியாக விவரிப்பதன் மூலம் கருத்துப்பரிமாற்றம் மற்றும் கண்ணோட்டம் காணும் திறனைப் பயிற்சி செய்ய குழந்தைகளை அழையுங்கள். உங்களுக்கு வழிகாட்ட கீழேயுள்ள நினைவூட்டிகளைப் பயன்படுத்துங்கள்.



பரிந்துரைக்கப்பட்ட நினைவூட்டிகள்:

- சிந்தியுங்கள்: இந்த நபர் யார் என்று நினைக்கிறீர்கள்? இந்த நபர் என்ன செய்கிறார்?
- உணருங்கள்: நீர்நாய்/குழந்தை/கால்நடை எப்படி உணர்கிறது என்று நினைக்கிறீர்கள்? ஏன்?
- அக்கறை செலுத்துங்கள்: நீங்கள் நீர்நாய்/குழந்தை/கால்நடையாக இருந்தால், இந்த நேரத்தில் நீங்கள் படத்தில் உள்ள எதைப் பற்றி அதிகம் அக்கறை செலுத்துவீர்கள்?

## கதை வட்டம்

புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு படத்திற்கும் ஒரு வாக்கியத்தை வாய்மொழியாக மாற்ற ஒவ்வொருவரையும் அழையுங்கள். ஒரு அச்சு நகலைப் பதிவிறக்கம் செய்து அல்லது https://bookcreator.com என்ற வலைத்தளத்தில் ‘MC8SSJP’ என்ற WRS நூலகக் குறியீட்டைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுங்கள்




பரிந்துரைக்கப்பட்ட நினைவூட்டிகள்:

- நீங்கள் என்ன காண்கிறீர்கள்?
- அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?
- இந்த நபர் என்ன சொல்கிறார் என்று நினைக்கிறீர்கள்?

# 2 நிலைத்தன்மையைக் கடைப்பிடிப்பதற்கான 2 வழிகள்



நீர்நாய்களுக்கும் அவற்றின் நண்பர்களுக்கும் நாம் எவ்வாறு உதவலாம்? பாதுகாப்பு மற்றும் நீடித்த நிலைத்தன்மை முயற்சிகள் மூலம் வனவிலங்குகளுக்கும் பூமிக்கும் உதவ நாம் என்ன செய்ய முடியும் என்பதைக் கண்டறியுங்கள்.

## அதற்கு இரண்டாவது வாழ்க்கை வழங்குங்கள்

பொருட்களுக்கு இரண்டாவது வாழ்க்கையை வழங்குங்கள். இது அதிகமான பொருட்களை உருவாக்க தேவையான வளஆதாரங்களின் அளவைக் குறைக்கிறது. இது நமது நீர்வழிகளில் அல்லது கடற்கரையில் ஒதுங்கக்கூடிய கழிவுகளையும் குறைக்கிறது. நீர்நாய்களும் அவற்றின் நண்பர்களும் வாழ்வதற்குச் சுத்தமான இல்லமும் இருக்கும்!




- 18 மற்றும் 19ஆம் பக்கங்களுக்குப் புரட்டுங்கள். குழந்தைகள் வீட்டில் காணக்கூடிய பொருட்களை (எ.கா. பிளாஸ்டிக் புட்டிகள், உலோகக் கேன்கள்) அடையாளம் கண்டறியச் செய்யுங்கள்.
- இந்தப் பொருட்களைச் சேகரித்து, அவற்றைப் பென்சில் தாங்கிகள், தாவரத் தொட்டிகள் போன்ற பயனுள்ள பொருட்களாக மறுசுழற்சி செய்வதற்கு அவர்களிடம் சவால் விடுங்கள்.

## சரியாக மறுசுழற்சி செய்யுங்கள் - உங்கள் குப்பைகளைத் தரம் பிரியுங்கள்

மறுசுழற்சி செய்வது கழிவைக் குறைக்க உதவுகிறது.

குழந்தைகளை வீட்டிலும் பள்ளியிலும் உருவாக்கிய கழிவுகளின் பட்டியலைத் தயாரிக்கச் செய்யுங்கள்.

ஒரு மறுசுழற்சி செய்யும் பகுதியை அமைத்திடுங்கள். மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை வகைப்பிரித்து, அவற்றை வெவ்வேறு கூடைகளில் வைக்குமாறு குழந்தைகளுக்குச் சவால் விடுங்கள்.






# 1 கற்றலை நீட்டிப்பதற்கான 1 வழி

**சிங்கப்பூரில் வசிக்கும் நீர்நாய்களைப் பற்றி மேலும் அறிய குழந்தைகளை ஊக்குவியுங்கள்.**

- சிங்கப்பூரில் உள்ள நீர்நாய்கள் பற்றிய செய்தித் துணுக்குகளைச் சேகரித்துக் கலந்துரையாடலுக்கு உதவுங்கள்.
- பளபளப்பான தோற்றத்தைக் கொண்ட நீர்நாயைக் காட்டிலும் அரிதான சிறிய நகத்தைக் கொண்ட நீர்நாய் பற்றியும், சிங்கப்பூரில் அருகிவரும் உயிரினங்களைப் பற்றியும் மேலும் அறிய சிங்கப்பூர் விலங்குத் தோட்டத்திற்கான ஒரு கற்றல் பயணத்தை ஏற்பாடு செய்யுங்கள்.



பரிந்துரைக்கப்பட்ட நினைவூட்டிகள்:

- நீங்கள் சிங்கப்பூரில் எங்கு நீர்நாய்களைக் காணலாம்?
- அவற்றின் உணவு என்ன?
- அவை எதிர்கொண்டிருக்கின்ற அச்சுறுத்தல்கள் யாவை?
- அவற்றைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?
- நீர்நாய்கள் அல்லது பிற வனவிலங்குகளுக்கு உதவ நாம் என்ன செய்யலாம்?







பளபளப்பான தோற்றத்தைக் கொண்ட நீர்நாய்

PHOTO: DAVID TAN



சிறிய நகத்தைக் கொண்ட நீர்நாய்

# 3-2-1 Otter Fun

RECOMMENDED FOR PRESCHOOLERS



This resource is aligned to Nurturing Early Learners (NEL) framework to support learning outcomes in the following areas:

- **Language and Literacy**
- **Discovery of the World**
- **Social and Emotional Development**





3-2-1 Otter Fun

# 3 ways to use the wordless book '*Little Otter, Litter Trouble*' to practise language and literacy skills

## WORD CHALLENGE

Use each spread of the picture book to invite children to come up with 20 words for objects or actions in the picture.

SUGGESTED PROMPTS:

- What colours/shapes do you see?
- What objects do you see?
- What is the dad/girl/boy/otter doing?



## THINK-FEEL-CARE THINKING ROUTINE

Turn to pages 8 and 9. Invite children to practise the skill of communicating and perspective taking by verbally describing the characters. Use the prompts below to guide you.

SUGGESTED PROMPTS:

- THINK: Who do you think this person is? What is this person doing?
- FEEL: How you think the otter/child/vet is feeling? Why?
- CARE: If you were the otter/child/vet, what would you care about the most at this moment in the picture?




## STORY CIRCLE

Invite everyone to take turns to verbalise a sentence for each picture in the book. Download a hard copy to pen the sentences or do it virtually at *https://bookcreator.com* using the WRS library code '*MC8SSJP*'

SUGGESTED PROMPTS:

- What do you see?
- What do you think they are doing?
- What do you think the person is saying?







# 2 ways to practise sustainability

How can we help the otters and their friends? Discover what we can do to help wildlife and the Earth through conservation and sustainability efforts.

## GIVE IT A SECOND LIFE

Give objects a second life. This reduces the amount of resources needed to make more stuff. It also reduces waste that might end up in our waterways or the beach. The otters and their friends will also have cleaner home to live in!




- Flip to pages 18 and 19. Have children identify objects that they may find at home (e.g. plastic bottles, metal cans).
- Challenge them to gather these objects and upcycle them to pencil holders, flower pots, etc.

## RECYCLE RIGHT - SORT YOUR TRASH

Recycling helps to reduce waste.

- Get children to make a list of the waste created at home and in school.
- Set up a recycling corner. Challenge children to sort recyclable waste and place them in the different bins.






# 1 way to extend the learning

**ENCOURAGE CHILDREN TO LEARN MORE ABOUT THE OTTERS LIVING IN SINGAPORE.**

- Gather news clippings on otters in Singapore and facilitate a discussion.
- Organise a learning journey to Singapore Zoo to discover more about the small-clawed otter which is less common that the smooth coated otter, and a critically endangered species in Singapore.

SUGGESTED PROMPTS:
- Where can you spot otters in Singapore?
- What do they eat?
- What threats are they facing?
- What is being done to protect them?
- What can we do to help otters or other wildlife?




PHOTO: DAVID TAN